திருவள்ளுவராண்டு 2054

2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்

மலர்-7 இதழ்-23

# உலகத்தமிழ்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## ஆசிரியர் குழு

### தலைமை ஆசிரியர்


முனைவர் **அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
**மின்னஞ்சல்:** director@utsmdu.org


### ஆசிரியர் குழு (இந்தியா)


முனைவர் **வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** iits@tn.nic.in

முனைவர் **கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drarangapari@gmail.com

முனைவர் **வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drramarajapandian@gmail.com

முனைவர் **தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
**மின்னஞ்சல்:** dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com


### ஆசிரியர் குழு (அயலகம்)


திரு **ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆஸ்திரேலியா.
**மின்னஞ்சல்:** jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
**மின்னஞ்சல்:** s.lingkumaran@gmail.com

முனைவர் **இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
**மின்னஞ்சல்:** prabu0111@gmail.com

முனைவர் **வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
**மின்னஞ்சல்:** jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
**மின்னஞ்சல்:** sivakumaran.r@nie.edu.sg


### செய்தி ஆசிரியர்


முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை


### தொடர்புக்கு


0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை


### முகவரி




இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020

# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும் | - பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | - முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | - முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | - சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | - முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | - முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | - வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | - ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | - ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | - ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | - வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | - க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | - முனைவர் கு.கவிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | - திருமதி ஜே.எஸ். ஷர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | - முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | - மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | - முனைவர் ச. முருகேசன் | 128 |

# ஐங்குறுநூற்றில் உளவியல்



**முனைவர் ந. தமிழ்மொழி**
உதவிப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி,
மதுரை-09.
**மின்னஞ்சல்** : tamilmozhysatish@gmail.com

இலக்கியப் படைப்பில் உளவியல் உத்தி என்பது பற்றி, தமிழன் முதல் நூலான தொல்காப்பியம் மிக விரிவாகவே பேசுகிறது. தமிழ்க்காதல் என்ற தமது ஆய்வு நூலில் பேரறிஞர் வ.சு. மாணிக்கனார் என் ஆராய்ச்சியை உளவியல் ஆய்வாகவே செய்கிறேன் என்பார். உளவியல் என்பது தனிமனக்கூறு. இப்படியான கூறுகள் இலக்கியங்கள் அனைத்தும் விரவிக் கிடக்கின்றன. இத்தகைய தனிமனக்கூறு பற்றி பிறிதோரிடத்தில் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் 'நெஞ்சியல்' என்பார். உவமையாக உள்ளுறையாக, இறைச்சியாக உருவகமாக உளவியல் பாங்கு வெளிப்படும் என்பதே தொல்காப்பிய விளக்கம். புலப்பாட்டு வரிசையில் பாங்கு 'முன்னம்' என்ற உத்தி மிகுந்த இன்றியமையாமை பெறுகிறது. 'இவ்விடத்து இம்மொழி இவர் இவர்க்கு உரிய என்று அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்" (தொல்: 1443) தொல்காப்பியம் சொல்லும் இந்த நூற்பாவுக்கு, தமிழண்ணல் அவர்கள் முன்னம் என்பது பொதுவாகக் குறிப்பு என்றும் ஒருவரது உள்ளக்குறிப்பு என்றும் பொருள்படும் என்பார். இத்தகைய முன்னம் என்ற உளவியல் சார்ந்த அகத்தினைப் பாடல்களான,

"**அகவன் மகளே: அகவன் மகளே!**
**மனவுக் கோப்பன்ன, நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே:**
**இன்னும் பாடுக பாட்டே: அவர்**
**நன்னடுங் குன்றம் பாடிய பாட்டே!**" (குறுந்தொகை - 23)

என்ற ஔவையார் பாட்டு, உளவியல் அமைப்புக்கும் அழகுக்கும் புகழ்பெற்ற பாட்டாகும். தலைவனைப் பற்றிய பாடல்,

**“அன்னாய் வாழி வேண்டு அன்னை நம்படப்பைத்**
**தேன் மயங்கு பாலினும் இனிய - அவர் நாடு**
**உவலைக் கூவற் கீழ்**
**மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே”** (ஐங்குறுநூறு - 203)

தலைவனோடு, தலைவி உடன்போய், அவனை மணம் செய்து கொண்டு, தாய்வீட்டுக்கு வருகிறாள். அவளைப் பார்த்த தோழி, நீ உன் தலைவனோடு போய்விட்டாய், அவனுடைய நாட்டில் கிணற்று நீர் நல்ல நீர் இல்லையாமே, இலைகளும் தழைகளும் விழுந்து அழுகிப்போன தண்ணீர்தான் கிடைக்குமாமே. நமது நாட்டில் தோட்டத்தில் தேனும் பாலும் கலந்தது போன்ற தண்ணீர் குடித்தாய், அப்படியிருக்க உன் தலைவனுடைய ஊரின் கிணற்று நீரை எப்படி அருந்தினாய்! என்று கேட்டாள். அவளுக்குத் தலைவி சொன்ன மறுமொழிதான் இந்தப்பாட்டு நீ சொல்வது போல், அவர் நாட்டில் கிடைக்கும் தண்ணீர் இலை மக்கியதும், விலங்குகள் கலக்கியதுமாக இருக்கலாம். ஆனால் அதுதான் எனக்கு இனிமை தந்த தண்ணீர் என்று தலைவி சொல்கிறாள். இன்ப உணர்ச்சிக்கும் துன்ப உணர்ச்சிக்கும் மனம்தான் காரணம், உளவியல் ரிதியாகத் தலைவி துன்பச் சூழ்நிலையை இன்பச் சூழ்நிலையாக மாற்றிக் கொள்கிறாள் என்று எழுதினார்கள். சங்க இலக்கியத்தில் உளவியல் பாங்கு அல்லது சிறப்பு என்பது கூற்று நிலை பற்றியதும் ஆகும். எல்லாக் கருத்துகளையும் எல்லாரும் கூறிவிட முடியாது. இந்த வரையறை உளவியல் தொடர்பானது. ஒரு சூழ்நிலையில் நற்றாய் பேச முடியாத நிலையில், அவளது நிலைபற்றித் தோழி எடுத்து மொழிகிறாள். இவ்வாறு ஒரு பாத்திரத்தின் நிலை பற்றி வேறு ஒரு பாத்திரம் பேசுவதை ‘கொண்டெடுத்து மொழி” என்று தொல்காப்பியம் (1447) குறிப்பிடுகிறது.

தலைவன் தலைவியின் காதல் உணர்வினை இருமனம் இணைந்து திருமணம் ஒழுக்கத்தில் ஈடுபடும் வரை ஏற்படும் தவிப்பு, அச்சம், பதட்டம், பிரிவுத்துயர் ஆகியவற்றை நுண்ணிய உணர்வுப் பதிவாகத் தருகிறது. ‘வருவேன்” எனக்கூறிச் சென்ற தலைவன், வராத காரணத்தால் ஏற்பட்ட உணர்வுக் கொந்தளிப்பையும் ஐங்குறுநூறு பதிவு செய்கிறது.

உள்ளமுறிவு எவ்வகை தீர்வும் இன்றித் தொடருமானால் உள்ள இறுக்கம் அதாவது ‘stress’ தோன்றும். உள்ள முறிவின் காரணமாக எதிர்மறையான ‘Emotion’ எனும் உள்ள கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. அப்போது சினம், அச்சம், கவலை எனும் மூன்று நிலைகளை மனம் சென்றடைகிறது.

பகைவருக்குக் காத்திருக்கும் அரசாணையும் உடனிருக்கும் தலைவனையும் ஐங்குறுநூறு(451) சுட்டுகிறது. ஊர் திரும்பிய வெற்றியாளர் சொன்ன செய்தியில் தலைவி கவலை கொள்கிறாள். விநாடியில் அவள் மகிழ்கிறாள். மகிழ்ச்சிக்குக் காரணம் தலைவனின் வெற்றியும் அவனுக்கு ஊறு நேராவண்ணம் உள்ள தம் நிம்மதியுமே ஆகும். இவ்வாறான உணர்வுப் போராட்டம் தலைவியை அலைக்கழிக்கிறது.

"**கடலின் நாரை இரற்றும்**
**மடல்அம் பெண்ணை அவனுடை நாட்டே**" (ஐங்குறுநூறு - 114)

இப்பாடல் கடலை விட்டு நீங்கி வந்த நாரைக்குத் தலைவனின் நாட்டிலுள்ள பனை மரமானது தங்குவதற்கு இடம் கொடுத்ததைப் போன்று தலைவியும் அவளது இல்லத்தை விட்டு நீங்கித் தலைவனுடைய நாட்டிற்குச் சென்று விட்டாள் என உள்ளுறையாகக் கூறப்படுகிறது.

பெரிய கடற்கரையில் வாழும் சிறுவெண்காக்கையினது செயல்பாடானது நெய்தல் நிலத்தில் இயல்பாக நடைபெறக்கூடியதாகும். இச்செயல்பாடுகளைத் தலைவனுடைய செயல்பாடுகளோடு பொருந்துமாறு ஆசிரியர் கூறுகிறார்.

"**பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை**
**இருங்கழி அயிரை ஆரும்**" (ஐங்குறுநூறு - 164)

என்றார்.

உளவியல் முழு வளர்ச்சி பெறாத ஓர் இளம் அறிவியலாகத் திகழ்கிறது. இது மனிதனின் இயல்புகளையும் நடத்தையையும் பற்றிய அறிவியலாதலின் உளவியல் அறிஞர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

1. நடத்தைக் கோட்பாடுகள் 2. நோக்கக் கோட்பாடு
2. உளபகுப்புக் கோட்பாடுகள் 4. முழுநிலை காட்சி கோட்பாடு

என்பன குறிப்பிடத்தக்கன.

**நடத்தை கோட்பாடுகள்**

உளவியலின் ஆராய்ச்சிப் பொருள் மனிதனது வெளிப்படையான புறத்திலிருந்து பிறரால் பார்த்து ஆராயக்கூடிய நடத்தைக் கோலங்களே ஆகும். மனித நடத்தையின் அடிப்படையாகத் தூண்டல் - துலங்கல் தொடர்புகளே காரணமாக அமைகின்றன. இவ்வுயிர் உந்தல் பல்வேறு இயல்பூக்கங்களாகக் கிளர்த்தெழுந்து மனித நடத்தைக்கு ஊக்கியாகச் செயல்படுகிறது. இவ்இயல்பூக்கங்களே மனிதனது நடத்தைப் போக்கையும் ஒழுக்க வளர்ச்சியினையும் நிர்ணயிக்கின்றன.

**எதிர்ப்பு**

தலைவன் பரத்தையர் ஒழுக்கத்திற்குப் பிறகு மீண்டு வந்து தோழியிடம் வாயில் வேண்டுகிறான். ஆனால் தோழி தலைவனின் புறவொழுக்கத்தால் வெறுப்புற்ற தோழி அவன் மீண்டு வருகிற போது நீ இங்கு வருவதைவிட வராமல் இருப்பதுவே நன்று என்று புலந்து கூறுகிறாள். இதனால் தலைவனின் புறத்தொழுக்கத்தால் தலைவி வருந்துவதும் தோழியரின் மனத்தில் எதிர்ப்புணர்ச்சி தோன்றி அதன் மூலம் அவன் மீண்டு வருவதை வெறுக்கும் மகளிரின் மனநிலையை அறிய முடிகிறது.

"**நினக்கே அன்று அ/து எமக்குமார் இனிதே**
**நின்மார்பு நயத்த நன்னுதல் அரிவை**
**வேண்டிய குறிப்பினை யாகி**
**ஈண்டுநீ அரளது ஆண்டுறை தல்லே**" (ஐங்குறுநூறு : 46)

**அறியும் ஆர்வம்**

கற்பொழுக்கத்தில் சிறப்புற்று இருக்கும் தலைவன் - தலைவியைச் செவிலி கண்டு வருகிறாள்.

"**மறியிடைப் படுத்த மாண்பினைப் போலப்**
**புதல்வன் நடுவண் னாக நன்றும்**
**இனிது மன்றவர் கிடக்கை முனிவின்றி**
**நீலநிற வியலகம் கவைஇய**
**ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே**" (ஐங்குறுநூறு - 401)

என்ற செய்யுளில் தான் கண்ட காட்சியை நற்றாயிடம் வியப்புடன் செவிலித்தாய் கூறுகிறாள்.

கடிமனை சென்று வந்த செவிலி உவந்த உள்ளத்துடன் நற்றாய்க்குச் சொல்லியது. பெருமாட்டி தன் குட்டியை இடைநிலத்தே கிடக்கவிட்டு இருமருங்கும் கிடக்கும் கலைமானும் பினைமானும் போலத் தன் மகனைத் தமக்கு இடையில் படுக்க வைத்து நம்பியும் நம் மகளும் இருவரும் இனிதுபாயல் கொண்டிருப்பது காண்பதற்கு இனிய காட்சியாகும். இவ்வின்பக் காட்சி நிலவுலகத்துக்கும், மேலுலகத்துக்கும் பெறுவதற்கு அரிய ஒன்று. அச்செய்யுளில் தலைமக்கள் நடத்தும் கற்பு வாழ்க்கையை அறியும் ஆவலோடு செவிலி செல்வதையும், அக்காட்சியைக் கண்டபின் வியந்து கூறுவதிலிருந்து தலைமக்களது நடத்தைக் கூறுகள் புலப்படுகின்றன.

**போர்க்குணம் - கோபம்**

**“தன்பார்ப்புத் தின்னும் அன்புஇல் முதலையொடு**
**வெண்பதும் பொய்கைத்து அவனூர்என்ப அதனால்**
**தன்சொல் உணர்ந்தோர் மேனி**
**பொன்போல் செய்யும் ஊர்கிழ வோனே ”** (ஐங்குறுநூறு - 41)

தலைவனது ஒழுக்கத்தைச் சாட நினைக்கும் தலைவி அவன் பிறந்த ஊரும் கொடுமையானது என்கிறாள். அதாவது தலைவனின் ஊர், தான் ஈன்ற பிள்ளைகளைத் தானே கொன்று தின்னும் இயல்புடைய முதலைகளை உடையது அவ்வியல்பு உடைய அவ்வூரில் பிறந்தவனும் அவ்வாறே இருப்பான் என்று தலைவனது நடத்தையினைக் கோபத்துடன் வெளிப்படுத்துகிறாள்.

**பாலுணர்வு**

**“வறந்த ஞாலம் தளிர்ப்ப வீசிக்**
**கரங்குரல் எழிலி கார்செய தன்றே**
**பகைவெங் காதலர் திறைதரு முயற்சி**
**மெல்தோல் ஆய்கவனி மறையப்**
**பொன்புனை பீரத்து அவர் செய் தன்றே ”** (ஐங்குறுநூறு - 452)

இச்செய்யுளில் தலைவன் திரும்ப வராததால் தன்னுடைய மெல்லிய தோள்களின் அழகு மறைந்து பீர்க்கம்பூ போன்ற பசலை மிகுதியாகப் படர்கிறது என்று தலைவன் இல்லாமல் தனக்கு ஏற்படுகின்ற காமத்துன்பத்தை வெளிப்படுத்துகிறாள்.

**வேண்டுதல் - துன்பம்**

**“அன்னாய் வாழி வேண்டன்னையென் தோழி**
**நனி நாண் உடையன் நின்னும் அஞ்சும்**
**ஒலிவெள் எருவி ஓங்குமலை நாடன்**
**மலர்ந்த மார்பின் பாயல்**
**துஞ்சிய வெய்யள் நோகோ யானே ”** (ஐங்குறுநூறு - 205)

தலைவன் தலைவியின் களவு ஒழுக்கத்தைக் கூறி உடல் மெலிவிற்குரிய காரணத்தைக் கூறுகிறாள். இதன் மூலம் தலைவியின் நடத்தையினை அவளுடைய தூண்டல் துலங்கல் உணர்வுகளின் வாயிலாக அறிய முடிகிறது. உளநலத்தின் இயல்பு, நலத்திற்குத் தடையாக இருப்பவை, உளநலத்தை வளர்ப்பதற்கான வழிமுறைகள்

முதலியன குறித்துச் சிக்மண்ட் பிராய்டும் அவருக்குப்பின் வந்தோரும் ஏராளமான ஆய்வுகள் செய்துள்ளனர்.

**தொல்காப்பியர் குறிப்பிடும் மனஎழுச்சிகள்**

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப"** (தொல்காப்பியம் - 252)

என்று வகைப்படுத்துகிறார்.

களவு கைகூடுமோ இல்லையோ எனத் தீவிர மனப் போராட்டங்களுக்கு உட்படும் தலைவி, தீவிர மனவெழுச்சிகளால் பாதிக்கப்படும் போது, பசியின்றித் தூக்கமின்றி உடல்மெலிந்து, சோர்ந்து, எதையோபறி கொடுத்ததைப் போன்று காணப்படுகிறாள். இதைக் கண்ணுறும் தாய் தன் மகள் எதனால் இந்நிலையினை அடைந்திருக்கிறாள் எனத் தெரியாமல் தடுமாறி இறைவழிபாட்டிலும், குறி கேட்பதிலும் வெறியாட்டிலும் ஈடுபடுகிறாள்.

**"முட்டுவயிற் கழறல் முனிவு மெய்ந்நிறுத்தல்**
**அச்சத்தின் அகறல் அவன் புணர்வு மறுத்தல்**
**தூது முனிவின்மை துஞ்சிச் சேர்தல்**
**காதல்கைமிகல் கட்டுரையின்மையென்று**
**ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்"** (தொல்காப்பியம் - 272)

என்கிறது தொல்காப்பியம்.

**பொருள்**

பொருள் என்பது வாழ்க்கையின் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றது. ஐங்குறுநூற்றில் பாலைத்திணையில் அமைந்துள்ள செலவழுங்குவித்த பத்து எனும் துறையை அடிப்படையாகக் கொண்டு பொருள் காரணமாகப் பிரிவினை மேற்கொள்ளும் தலைவனைச் செல்ல விடாமல் அவன் மனதை மாற்ற நினைக்கும் தடைகளை விளக்கி இறுதியில் பொருள் மதிப்பு பெறுவதை அறிய முடிகிறது.

**பொருள் மதிப்பு பெறுவதில் ஏற்படும் தடைகள்**

1. தலைவனை அச்சுறுத்தல்
2. உறுதியற்ற மனநிலையை உருவாக்குதல்
3. நம்பிக்கையைப் பொய்யாக்கதே எனக்சுட்டல்
4. குழந்தையின் நகைப்பைச் சுட்டிக் காட்டல்
5. காம உணர்வினைத் தூண்டல்

**தலைவனை அச்சுறுத்தல்**

பொருள்வயின் பிரியும் தலைவனைப் பல காரணங்களைக் காட்டி அச்சுறுத்துகின்றாள் தோழி பாலை நிலத்தில் இருக்கும் கொடிய மலைப்பகுதிகள் ஆபத்தானவை. அவைகள் துன்பம் தரக்கூடியவை என்பதை,

"**மால்வெள்ளொத்திரத்து மையில் வாலிணர்**
**அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும்**" (ஐங்குறுநூறு - 301)

இவ்வரிகள் விளக்குகின்றன. பாலை நிலத்தின் வெப்பம், ஆறலைக் கள்வர்கள், விலங்குகளால் ஏற்படும் ஆபத்து, உன் பிரிவில் தலைவி உயிர் வாழாமல் இறந்து விடுவாள் என்றெல்லாம் தோழி அச்சுறுத்துகின்றாள்.

"**காட்டிடைச் செல்வோலைக் கொலைஞர்கள்**
**கொன்று கொல்லப்பட்ட**" (கலித்தொகை : 12)

என்னும் வரிகள் காட்டிடைச் செல்வோரைக் கள்வர்கள் கொலை செய்வதைச் சுட்டுகின்றன. இவ்வாறு ஆறலைக் கள்வரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமலும் கொடிய நீண்ட பாலை வழியினைக் கடந்தும் பொருள் தேடச் செல்வது வறியவர்களுக்கும் உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் தான் என்பதை,

"**இல்லோர் இல்லென் றியைவது காத்தல்**
**வல்லா நெஞ்சம் வலிப்ப**" (அகநானூறு:53)

தன்னை நாடிவரும் இரவலர்க்கு இல்லையென்று கூறும் மனவலிமை இல்லாததால் தான் என்கிறது அகப்பாடல். பொருள் என்பது எல்லாக் காலத்திலும் மதிப்புடையதாக இருப்பினும் அதனை அறம் சார்ந்ததாகக் கூறும் கருத்து இருந்துள்ளது.

**உறுதியற்ற மனநிலையை உருவாக்குதல்**

தோழி தலைவனின் பிரிவைத் தடுப்பதற்குப் பல காரணங்களைச் சந்திக்கின்றாள். அதில் ஒன்றாகத் தலைவனின் மனநிலையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்று நினைத்து,

"**எனைப்பயஞ் செய்யுடுமா விடலை நின் செலவே**" (ஐங்குறுநூறு : 305)

இதில் தலைவனை நோக்கி, தோழி நீ போகும் எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டால் என்ன செய்வது? பொருள் கிடைத்தாலும் கிடைக்கலாம் உறுதியாகக் கூறவியலாது. நன்றாகச் சிந்தனை செய்து முடிவ எடு என்கிறாள் தோழி. இப்படியெல்லாம் கூறித் தலைவனை உறுதியான முடிவு எடுக்கவிடாமல் மனத்தடுமாற்றத்தை உருவாக்குகின்றாள்.

**நம்பிக்கையைப் பொய்யாக்கதே எனக் கூறல்**

பண்டைக் காலத்தில் சமய நம்பிக்கை இருந்ததையும், சூளுரைக்கும் வழக்கம் இருந்ததையும் சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. தலைவனின் சூளுரையை முழுமையாக நம்பி இருக்கும் தலைவியின் மனநிலையைத் தோழி விளக்குகின்றாள்.

"**முருகமர் மாமலை பிரிந்தெனப் பிரிமே**" (ஐங்குறுநூறு-307)

எனும் வரி கடவுள் மீது நீ சூளுரை செய்திருக்கின்றாய். கடவுள் நம்பிக்கைக்கு மாறாக நடக்காதே அது தீமையை ஏற்படுத்தும் என்பதனைச் சுட்டுகின்றது. மேலும் தலைவிக்குப் பொய்யன் ஆகாதே என்றும் வலியுறுத்துகின்றாள்.

**குழந்தையின் நகைப்பைச் சுட்டிக் காட்டல்**

"**நின்னயந்து உறைவி கருஞ்சூல் சிறுவன்**
**முறுவல் காண்டலின் இனிதோ**
**இறுவரை நாடநீ இறந்துசெய் பொருளே**" (ஐங்குறுநூறு:309)

குழந்தைப் பேற்றினைப் பற்றிக் கூறாத அக இலக்கியங்களே கிடையாது. இல்லற வாழ்வின் முக்கியப் பங்கு குழந்தைப் பேறாகும். வெப்பம் மிகுந்த நிலத்தின் வழியே பொருளீட்டுவதற்குப் போக விரும்புகின்றாய். நீ தலைவியை விட்டுப் பிரிந்து சென்று ஈட்டும் பொருள் தலைவி பெற்றெடுக்கும் மகனுடைய புன்னகையை விட இன்பத்தை உண்டாக்குமா? என்று வினவுகின்றாள் தோழி.

**காம உணர்வினைத் தூண்டுதல்**

"**பிரிதல் வல்லுவை ஆயின்**
**அரிதே விடலை இவள் ஆய்நுதற் கவினே**" (ஐங்குறுநூறு - 310)

எனும் வரிகள் இளமையும் அழகும் நாள்தோறும் கழியும் தன்மை உடையன. கழிந்தால் அவற்றை மீண்டும் பெற முடியாது எனக் கூறித் தலைவனை மூளைச்சலவை செய்கின்றாள்.

**மனஅளவைக் கருவி - தோழி**

தலைவன் பொருள்வயின் பிரிவைத் தோழியிடம் கூறுகின்றான். பிரிவின் துயரத்தையும் தலைவனிடம் மதிநுட்பத்தோடு எடுத்து உரைக்கின்றாள். தலைவியின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் தோழி சிறந்த வாயில் மட்டுமல்ல மனதின் ஆபத்தைக் கண்டறிந்து வெளிப்படுத்தும் உளவியல் ஆசிரியராகக் காட்சியளிக்கிறாள்.

“**அம்வரை இறக்குவை யாயின்**

**மை வரை நாட வருந்துவள் பெரிதே**” (ஐங்குறுநூறு - 301)

என்ற வரிகள் தோழியின் உளவியல் அறிவைப் புலப்படுத்துகிறது.

கடுமையான பாலை நிலத்தின் கொடுமையைத் தலைவியால் தாங்க இயலாது என்று நீ வருந்துகிறாய். ஆனால் தலைவியோ உன்னைப் பிரிவதைத் தான் கடுமையான துன்பமாகக் கருதுகிறாள். நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்ற மனநிலையில் உள்ளார்.

“**போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ்சுரம்**

**தண்மிய இனிய வாக**

**எம்மொடுஞ் சென்மோ விடலை நீயே**” (ஐங்குறுநூறு - 303)

என்ற பாடல் வழியே அறிய முடிகிறது.

**பசலை**

தலைவியின் அழகை நீயும் அனுபவிக்காது, அவளது நலமும் சிதைவது நீர்வறண்ட பள்ளங்களிடத்தே ஆநிரைக்காகக் கோவலர் குழி தோண்டுவர். அதில் ஊறிய நீரினைப் பசு உண்பதற்கு முன்னர் யானைக் குடித்துச் சென்று விடும். கோவலரது உழைப்பும் வீணாகி, ஆநிரையும் தாகம் தணியாமல் தவிப்பது போல உள்ளது. எனவே பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்திடு என்கிறாள்.

நோய் நோய்க்குரிய காரணம், நோய் தீர்க்கும் மருந்து முதலியவற்றைக் கண்டறிந்து செயல்படுகிற தோழியின் நுண்மான் நுழை புலத்தினை,

**“கல்லதர்க் கவலை செல்லின் மெல்லியல்**

**புயங்நெடுங் கூந்தல் புலம்பும்**

**வயமான் தோன்றல் வல்லா ‘தமே”** (ஐங்குறுநூறு - 304)என்ற வரிகள் கூறுகின்றன.

இன்பத் துன்பங்கள் பொருட்களிலும் சூழ்நிலையிலும் மட்டுமல்ல நுகர்வோரின் மனத்தை ஒட்டி அவை பெரிதும் மாறுகின்றன.

**“மானுண் டெஞ்சிய கலுழி நீரே”** (ஐங்குறுநூறு - 203)

மானின் எச்சில் நீர் தேனினும் பாலினம் இனிப்பதற்குக் காரணம் தலைவியின் உள்ளம். இதே மனநிலையை உற்ற தன்மையை,

**“வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை**

**நள்ளுரும் பொய்கையும் தீயுமோர் அற்றே”**

எனும் வரிகள் பெருங்கோப் பெண்டு பேசுகிறாள். கணவன் இறந்த பின்பு தனக்குக் கிடைக்கப் போகும் கைம்மைத் துயரை விடக் கணவனின் சிதையில் வீழ்ந்து மறைதல் பெருமை தரத்தக்கது என்கிறாள். நீயும் தாமரைக் குளமும் ஒன்றாதல் அவற்றின் இயல்பினால் அல்ல, அவற்றை அணுகுவோரின் மனநிலையில்தான் என்ற கருத்து வெளிப்படுகிறது.

பாலைச்சுரத்திடையே செல்லும் தலைவன் தலைவியை நினைந்து செல்வதால் வெப்பம் மிக்க காடு குளிர்ச்சியாகி விடுவதாகவும் (ஐங்குறுநூறு-322) ‘அரிய ஆயினும், எளிய அன்றே” என்னும் தன்மையில் தலைவியை நினைத்து வருவதால் வழியின் கடுமை குறைவதாகவும் (ஐங்குறுநூறு-360) பாடல்களில் அமைந்துள்ளது.

தலைவியை விட்டு நீங்கியதால் மழை பெய்து குளிர்ச்சியான காட்டு வழியும் வெப்பமுடையதாக மாறிவிடுவதாகவும் (ஐங்குறுநூறு-328) பிரிந்து செல்லும் போது நீண்ட நெடுவழி, தலைவியைக் காண்பதற்காகத் திரும்பி வரும் போது மிகச் சுருக்கமாகி விடுவதாகவும், தலைவன் கருதுவது அனைத்தும் மனம் சார்ந்த உணர்வின் வெளிப்பாடுகள் ஆகும்.

**பொதுமை**

ஓரிரு அனுபவங்களால் நேர்ந்த ஒரு முடிவினை அனைத்துச் சூழல்களுக்கும் பொருந்துவதாக ஆக்க நிலைக் கோட்பாடாக்கிக் கொள்வது பொதுமையாக்கம் என்று உளவியலார் கூறுகிறார்.

பரத்தமை தொடர்பை ஊரில் உள்ள எல்லாப் பெண்களுக்கும் பொதுமையாக்கமாக அமைக்கப்படுகிறது.

தலைமக்களின் மனநிலை, தோழியின் மனநிலை வாழ்வியல் சூழல் இவையாவும் ஐங்குறுநூலில் மிகுதியா காணப்படுகிறது. அகவொழுக்கத்தை பற்றிக் கூறும் 500 பாடல்களும் சங்கக் கால வாழ்வியலை எடுத்துக் காட்டுகிறது. பாடல்கள் ஒவ்வொன்றும் உடல், மனம் சார்ந்த உளவியல் பகுப்புகள் என்பதை மறுக்க முடியாது.

**பார்வை நூல்கள்**

1. தமிழ்க்காதல் - வ.சு.ப. மாணிக்கம்.
2. தொல்காப்பியம் - தமிழண்ணல்.
3. ஐங்குறுநூறு - உரையாசிரியர் முனைவர் அ.மா.பரிமணம், முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்.
4. குறுந்தொகை - உரையாசிரியர் முனைவர் அ.மா.பரிமணம், முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712